21

பொழுது

அவளுக்கு போர் அடித்தது. கணவன் பேச்சைக் கேட்டிருந்தால் இந்தத் தொல்லை இல்லை.

முதல் நாள் அவன், 'இன்ஸ்பெக்ஷனுக்காக நாளை போக வேண்டும்' என்றபோது, அவள், 'நானும் வருகிறேனே...' என்றாள்.

"யூ வில் பி போர்ட்! நான் உன்னோடு இருக்கமுடியாது... உன்னை டி.பி.யில் விட்டுட்டுப் போனா, நாலு பாலங்கள் இன்ஸ்பெக்ஷன் முடிந்து திரும்ப நாழியாகும்..."

"ஐ டோண்ட் மைண்ட்...இங்கே மட்டும் என்ன வாழ்கிறது? ஐ லைக் டு கம்..."

அவள் பட்டிணத்தில் பிறந்து, படித்து, வாழ்ந்தவள். அவளுக்கும் அவனுக்கும் திருமணமாகி நான்கு மாசங்கள் ஆகின்றன. பெரியவர்கள் பார்த்து நிச்சயித்த கல்யாணம். அவன் ஒரு என்ஜினியர். பட்டிணத்து பி.டபுள்யூ.டி. பிரிவில் வேலையாக இருந்தவனை, ஒரு காரணமுமில்லாமல், முன்பின் அறிக்கை இல்லாமல், இரண்டு மாசங்களுக்குமுன் இந்தச் சின்ன டவுனுக்கு ஏ.ஈ.யாகப் பதவி உயர்வுடன் மாற்றிவிட்டார்கள்.

சின்ன டவுனில் எப்படிக் குடித்தனம் செய்யப்போகிறோம் என்று அவளுக்கு ஒரே மலைப்பு.

"இப்போ போகலாம்...ஆறு மாசம் கழிச்சு மறுபடி டிரான்ஸ்ஃபருக்கு முயற்சிக்கலாம். ப்ரமோஷன் கிடைச்சிருக்கறதை ஊருக்கு பயந்துண்டு வாண்டாம்னா எப்படி?"

முதலில் அவன் வந்து, வளர்ச்சி பெறாத அந்த ஊரில் கிடைத்த விதத்தில் சுமாரான வீட்டை அமர்த்தினதும், அவள் வந்து சேர்ந்துகொண்டாள்.

பட்டிணத்து வேலை மாதிரி இல்லை இங்கு. சதா இன்ஸ்பெக்ஷன், டூர். இரவு தங்கும் ஜோலி இல்லாவிட்டாலும், பல சமயங்களில் அவன் காலையில் புறப்பட்டுப் போனால் இருட்டிவிடும் திரும்ப.

அவளுக்கு அந்த ஊரைப் பிடிக்கவில்லை. அந்த ஊர் ஜனங்களைப் பிடிக்கவில்லை. ஒன்றையுமே பிடிக்கவில்லை.

பி.ஏ. இங்கிலீஷ் லிட்டரேச்சர் படித்தவளுக்கு அந்த ஊர் சரிப்பட்டு வராமல் போயிற்று.

அவன் அலுவலக வேலையாய் பட்டிணம் செல்ல நேரும் போது கூடவே போய்விட்டு, திரும்ப வருகையில் நாலு லைப்ரரியிலிருந்து புத்தகங்களைக் கொண்டுவருவாள். அவன் வீட்டில் இல்லாதபோது கதவைத் தாளிட்டுக்கொண்டு புத்தகங்கள், பத்திரிகைகள் படிப்பாள். இல்லாவிட்டால் தூங்குவாள்.

அன்று அவன் இன்ஸ்பெக்ஷனுக்குப் போகப் போவதாய்ச் சொன்னபோது, வீட்டில் படிக்கப் புத்தகங்கள் எதுவும் இல்லாத காரணத்தாலும், காற்று முகத்தில் வீசியடிக்க ஜீப்பில் அவனோடு போவது பிடிக்குமாதலாலும், அவளும் வருவதாகப் பிடிவாதம் செய்து புறப்பட்டுவிட்டாள்.

விடிகாலையில் புறப்பட்டு, வழி ஹோட்டலில் சிற்றுண்டியை முடித்துக் கொண்டார்கள்.

நெடுஞ்சாலைப் பாலங்கள் சிலவற்றை அவன் சர்வே செய்ய வேண்டி இருந்ததால், சாலையை அடுத்திருந்த பயணிகள் தங்கு விடுதியில் அவளை இறக்கிவிட்டான். பி.டபிள்யூ.டி.க்குச் சொந்தமான டி.பி. அது.

அவன்கீழ் வேலை பார்க்கும் செக்ஷன் ஆபீஸர், ப்யூன், கண்ட்ராக்டர், டி.பி. வாட்ச்மேன் எல்லோரும், அவர்கள் வருவதற்கு முன்னதாகவே அங்கு காத்திருந்தார்கள்.

"அம்மா தனியா இருக்காங்க...அந்தண்டை இந்தண்டை போகாம வாசல்லியே இருந்து பார்த்துக்க! கூப்பிட்டா என்னான்னு கேளு!"

வாட்ச்மேன் தலையாட்டினான்.

"எங்க வீட்டிலேருந்து ஸ்பெஷலா சாப்பாடு பன்னண்டு மணிக்கு வந்திடும் சார்...அம்மா சாப்பாடு பத்தின கவலை உங்களுக்கு வாணாம் சார்!" கண்ட்ராக்டர் தன் பங்கு வேலையை செவ்வனே செய்யத் துடித்தார்.

அவன் உள்ளே போனான்.

"கண்ட்ராக்டர் வீட்டுலேருந்து சாப்பாடு வந்துடும்...இங்க வாட்ச்மேன் இருக்கான், ஏதாவது வேணும்னா கேளு. ஐ வில் ட்ரை டு கம் ஆஸ் ஏர்லி ஆஸ் பாஸிபிள்! கதவை வேணா தாள் போட்டுண்டு கொஞ்சம் தூங்கப்பாரு...வரட்டுமா?"

யாரும் பார்க்கவில்லை என்று ஊர்ஜிதப்படுத்திக்கொண்டு, மனைவியின் கன்னத்தில் செல்லமாய் முத்தம் கொடுத்துவிட்டு, அவன் வெளியே போனான்.

ஜீப் புறப்பட்டுப் போய்விட்டது.

வேலியோரத்தில் இருந்த கதவைச் சார்த்தின வாட்ச்மேன், தோட்டத்தைக் கூட்டத் தொடங்கினான்.

வராந்தாவில் நின்று அவள் சுற்றிலும் வேடிக்கை பார்த்தாள்.

ஓடு வேய்ந்த கட்டிடம் அது. சுற்றி கன்னாபின்னா என்று பெரிய தோட்டம்! பெரியபெரிய வேப்ப மரங்கள்...அதன் நிழலில் சரியாக வளராத பொணப்பூச் செடிகள். வரிசையாய் ஓரத்தில் பதித்திருந்த செங்கற்கள் புதுசாய் வெள்ளை அடிக்கப்பட்டிருந்தன. எந்த முக்கிய மனிதர் வந்துபோனாரோ!

டி.பி.யின் இடதுபக்கம் ஒரு வாதாம் மரம். அதன் பக்கத்தில் புஸ்ஸென்று மனோரஞ்சிதப் புதர்.

பூ இருக்குமோ? அவள் இறங்கிப் போய் அதை இரண்டு முறை சுற்றிவந்தாள்.

"இப்பப் பூக்காதுங்க...இன்னும் நாள் போவணும்!" வாட்ச் மேனின் அசட்டுச் சிரிப்பு அவளுக்குப் பிடிக்கவில்லை. இவனை யார் கேட்டா?

மறுபடி வராந்தாவில் ஏறி, அறையை அடைந்து, கதவைச் சார்த்தித் தாள் போட்டாள்.

அறை பெரிதாய் இருந்தது. ஒரு இரும்புக்கட்டில், மெத்தை, மரமேஜை, நாற்காலி, மூலையில் மணல், அதில் குடிதண்ணீர்ப் ப்ரனை. விட்டத்திலிருந்து நீளமான கம்பியில் தொங்கின ஃபேன்...

பின்னால் பாத்ரூம். பைப் இல்லை, தகர ட்ரம்மில் தண்ணீர் இருந்தது. ஒரே பாசி நாற்றம். பாத்ரூமுக்கு இந்தப் பக்கம் சின்ன வராந்தா.

க்ரில் போட்ட சுவர் இடுக்கு வழியாக, பின்தோட்டத்தை அவள் பார்த்தாள்.

தூரத்தில் ஒரு குடிசை தெரிந்தது. வாட்ச்மேன் குடிசையா? ஆள் அரவமே இல்லையே? கல்யாணம் ஆகவில்லையோ? பார்த்தால் வயசானவனாய்த் தெரிகிறானே? ஒருவேளை பெண்டாட்டி செத்துப்போய்விட்டாளோ? அப்படியானால் குழந்தைகள் இருக்குமே?

வாட் நான்ஸென்ஸ்! எவனுக்குக் கல்யாணமானால் என்ன, குழந்தைகள் இருந்தால் என்ன, பெண்டாட்டி செத்தால் என்ன! வொய் ஷுட் ஐ இன்டல்ஜ் இன் ஸச் குட் ஃபார் நத்திங் திங்கிங்?

அவள் பார்வை அங்கிருந்த ஒரு கிணற்றிடம் போயிற்று. கிராமங்களில் காணப்படுவது போன்ற பெரிய கிணறு...குட்டைக் கைப்பிடிச்சுவர். மேல்பூச்சு இல்லாமல் செங்கல் தெரிய நின்றது.

அவள் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே நீலமும், ப்ரவுனும், கறுப்பும் கலந்த பறவை அந்தச் சுவரில் வந்து அமர்ந்தது. மூக்கு நீளமாய்...அது என்ன பறவை? ஓ யெஸ், மீன்கொத்தி இல்லை? சின்னவயசில் பாடப்புத்தகங்களில் பார்த்த படம் இப்படித்தானே இருந்தது?

சுவர்மேல் இருந்த பறவை ஒரு க்ஷண காலத்தில் கிணற்றுக்குள் பறந்தது.

குட்னஸ்! விழுந்துடுத்தா என்ன?

இருபது வினாடிகள் கூட நகர்ந்திருக்காது...

'சர்ர்' என்று மேலே வந்து சுவர்மேல் அமர்ந்து, வாயில் கவ்வியிருந்த சின்ன மீனைக் காலில் பிடித்து உண்ணத் தொடங்கியது.

அட எமனே! கிணற்றுக்குள் டைவ் அடித்து மீனைக் கொத்தினதும் சாமர்த்தியமாய் வெளியே வந்துவிட்டதே! கிணறு ரொம்ப ஆழமில்லையோ?

அடுத்து பத்து நிமிஷங்களுக்கு, மறுபடி இரண்டு முறைகள் கிணற்றில் டைவ் அடித்து, தன் இரையைக் கொண்டுவந்த பறவை, மூன்றாம் முறை இரையை உண்ணாமல் கவ்வியவாறே பறந்து போனது. வயிறு ரொம்பிவிட்டதா? இல்லை, குஞ்சுக்காகக் கொண்டு போகிறதா?

திரும்ப அது வரும் என்று கொஞ்ச நேரம் நின்று பார்த்து விட்டு ஏமாற்றத்துடன் அவள் அறைக்குத் திரும்பினாள்.

மணி என்ன என்று மணிக்கட்டைப் பார்த்தபோது கடிகாரம் நின்றிருப்பது புரிந்தது.

டாமிட்! மணி என்ன இருக்கும்? பதினொன்று? கிட்டத்தட்ட பன்னிரெண்டு? வாட்ச்மேனுக்குத் தெரிந்திருக்குமோ? கூப்பிட்டுக் கேட்கலாமா?

மணி என்னவானால் என்ன? தெரிந்துகொண்டு என்ன பண்ணப் போகிறோம்?

அப்போதுதான் அவளுக்கு போர் அடிக்கத் தொடங்கியது.

கணவன் பேச்சைக் கேட்டுக்கொண்டு வீட்டிலேயே இருந்திருக்கலாமோ?

வாட்ச்மேனை அனுப்பி, கிட்டத்தில் ஏதாவது பத்திரிகை கிடைக்குமானால் வாங்கிவரச் சொல்லலாமா? இன்று என்ன கிழமை? செவ்வாய்? ஒரு மாகசின் வரும் நாளும் இல்லை.

வீட்டிலிருந்து கொண்டுவந்திருந்த தினப்பத்திரிகையைப் பிரித்தாள்.

பிரதமர் படமும், ஜவஹர் நகரில் நடந்த காங்கிரஸ் கூட்டப் பேச்சுக்களும் பிரசுரமாயிருந்தன.

தலைக்குத் தலை பேசுகிறார்களே, இதில் எத்தனை பேர் ஆத்மார்த்தமாய் நடைமுறையில் தாங்கள் பேசும் கொள்கைகளைக் கடைப்பிடிக்கிறார்கள்? முக்கால்வாசிப் பேர் வேஷதாரிகள்... ஹிப்பாக்ரட்ஸ்!

மணி என்ன இருக்கும்?

கைப்பையிலிருந்து ஒரு சிக்லெட்டைப் பிரித்து வாயில் போட்டு மெதுவாக மென்றவள், நாற்காலியில் அமர்ந்தவாறே ஜன்னல் வழியாகத் தோட்டத்தைப் பார்த்தாள்.

நேர் எதிரில் வாதாம் மரம் இருந்தது. பெரிய மரம்...இலை ஒவ்வொன்றும் பட்டை பட்டையாய் பச்சென்று இருந்தது.

சின்னவயசில் சிகப்பு வாதாம் பழத்தைத் தின்று, கொட்டையை உடைத்துப் பருப்பையும் சுவைத்தது நினைவுக்கு வர, எழுந்து ஜன்னலிடம் போய் மரத்தில் பழங்கள் இருக்கின்றனவா என்று அண்ணாந்து பார்த்தாள். ம்ஹூம்...நிறைய வெள்ளைப் பூக்களும், சின்னச்சின்ன பச்சைக் காய்களும்தான் தெரிந்தன.

அருகாமையிலிருந்து மரத்தைப் பார்க்கையில் மேலிருந்து கறுப்புக் கட்டெறும்புகள் சாரிசாரியாய்க் கீழே இறங்குவது தெரிந்தது. குண்டுகுண்டாய் எறும்புகள் கொழுத்திருந்தன... கடித்தால் ரத்தம் வருவது நிச்சயம்.

மரத்தின் அடிவாரத்தில் அவலட்சணமான ஓணான் உட்கார்ந்திருந்தது. நன்றாய்க் குடித்த கிழவன் மாதிரி தலையை ஆட்டி, மார்பைத் தாழ்த்தி, மேலே நிமிர்த்தி, கீழே வரும் கட்டெறும்புகளைக் கிட்ட வரும்போது லபக்கென்று இருந்த இடத்திலிருந்தே அது விழுங்கியது.

மக்கு எறும்புகள்! வலியப்போய் ஓணான் வாயில் விழுகிறதே! மரத்துக்கு அந்தப் பக்கம் போகக்கூடாது? தனக்கு முன்னால் போன எறும்பை ஓணான் விழுங்குவதைப் பார்த்துக் கூடவா பின்னால் வருவதற்குத் தெரியவில்லை?

ஓணான் ஒரு எறும்பை விழுங்க எடுத்துக்கொள்ளும் நாழிகையில், அதைத் தாண்டும் அடுத்த எறும்பு தப்பித்தது. தான் மாட்டிக்கொள்ள இருந்ததோ, குருட்டு அதிருஷ்டத்தில் தப்பிப்பதோ, அந்த மட எறும்புக்குப் புரியவில்லையே!

இருந்த இடத்தை விட்டு அசையாமலேயே தன் வயிறு முட்ட விருந்து உண்ணும் ஓணான்மேல் அவளுக்குக் கோபம் வந்தது. மேஜை மேலிருந்த தினசரியைக் கொஞ்சம் கிழித்து ஒரு உருண்டை யாக்கினாள். ஜன்னல் வழியாக ஓணான்மேல் எறிந்தாள்.

காகித உருண்டை குறி தவறி மரத்தை விட்டுத் தள்ளிப்போய் விழுந்தது. இன்னொரு உருண்டை எறிந்தாள். இது ஜன்னல் கிட்டத்திலேயே விழுந்துவிட்டது. இன்னொன்று...இன்னொன்று... ஒன்றுகூட ஓணான்மேல் படவில்லை.

எறும்புகளுக்கு அப்படி சாகத் தலையெழுத்து என்றால் வொய் ஷுட் ஐ பாதர்!

அவளுக்குச் சலித்துவிட்டது. ரொம்ப நாழிகையாய் நிற்பதால் கால்கள் வலித்தன. திரும்ப நாற்காலியில் உட்கார நினைத்துத் திரும்பினபோது, வாட்ச்மேன் யாருடனோ பேசுவது கேட்கக் கதவைத் திறந்தாள்.

கண்ட்ராக்டர் வீட்டிலிருந்து அவளுக்குச் சாப்பாடு வந்திருக் கிறதாம்.

“அப்படி மேஜை மேல வெச்சிட்டுப் போகச்சொல்லு...”

அவர்கள் போனதும், மறுபடி கதவைத் தாளிட்டுக்கொண்டு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டாள்.

அடடா...மணி என்னன்னு அந்தப் பையனைக் கேட்டிருக் கலாமே! கையில் வாட்ச் இருந்ததே!

இலையை விரித்துத் தண்ணீர் தெளித்துவிட்டு, காரியரைக் கழட்டினாள்.

செக்கச் செவேலென்று குழம்பு, ரசம், கூட்டு, வாழைக்காய்க் கறி, உருளை சிப்ஸ். அது என்ன பாயசமா? தயிர்சாதம். நாட் பேட்!

சாப்பிடத் தொடங்கினதும்தான் எல்லாவற்றிலும் தொண்டையை அறுக்கும் காரமும், பூண்டும் இருப்பது புரிந்தது. அவளுக்குப் பூண்டு பிடிக்காது. தனி சிப்ஸை சாப்பிட்டாள். பிறகு தயிர்சாதம்...ஒரே புளிப்பு! அரைகுறையாய் சாப்பிட்டேன் என்று பெயர் பண்ணிவிட்டு எழுந்துவிட்டாள்.

வாட்ச்மேன் வந்து டேபிளை சுத்தம் செய்துவிட்டு, "நான் சாப்பாட்டுக்குப் போயிட்டு நொடியிலே வந்துடறேம்மா..." என்று சொல்லிப் போனான்.

கதவைத் தாளிட்டுக்கொண்டு அவள் படுத்தாள்.

தலையணையிலிருந்து எதோ நாற்றம். மூக்கைச் சிணுங்கிக் கொண்டாள்.

யார் படுத்திருந்ததோ!

கையோடு கொண்டு வந்திருந்த பிளாஸ்டிக் கூடையிலிருந்து டவல் ஒன்றை எடுத்துத் தலைகாணி, படுக்கை இரண்டிலும் சேர்த்து விரித்தாள்.

மறுபடி படுத்தாள். நௌ இட் ஈஸ் பெட்டர்—நாத்தம் தெரியலை.

கண்களை மூடிக்கொண்டு தூங்க முயற்சி செய்தாள். வீட்டில் மயக்கும் தூக்கம் இங்கு வரமறுத்தது.

வாட்ச்மேன் வந்துவிட்டானோ? ரொம்ப அத்துவானமான இடம்...'ஹோ' என்று நிசப்தமாக இருக்கிறதே! அவர் எப்போது வருவார்?

கண்களை மூடிக்கொண்டாள். நௌ ஐ ஷுட் ஸ்லீப்...

'கக்...கக்...கக்...கக்...'

அரைத் தூக்கத்திலிருந்த அவளை முதலில் அந்த சப்தம் கவரவில்லை.

'கக்...கக்...கக்...கக்...'

இரண்டாவது தடவை ஒலித்ததும் அவள் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தாள்.

'கக்...கக்...கக்...கக்...'

வாட் எ ஃபன்னி நாய்ஸ்! எங்கேயிருந்து வரது?

'கக்...கக்...கக்...கக்...' இப்போது அமைதியினூடே சப்தம் கொஞ்சம் பெரியதாகவே கேட்டது.

சுற்றுமுற்றும் பார்த்தவளுக்கு ஒன்றும் புரியவில்லை. எழுந்து ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தாள். பாத்ரூம், வராண்டாவில் பார்த்தாள். அவளுக்குக் கொஞ்சம் பயமாக இருந்தது.

'கக்...கக்...கக்...கக்...'

ஒரே சீராய் விட்டுவிட்டு என்ன சப்தம் இது? வாட்ச்மேன் வந்துவிட்டானோ?

எட்டிப் பார்த்தவரையில் காணோம். மறுபடியும் படுக்கையில் உட்கார்ந்தாள்.

'கக்...கக்...கக்...கக்...' சப்தம் அருகிலேயே ஒலிப்பது தெளிவானது.

எங்கே எதனால்? தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அறையைச் சுற்றி நிதானமாய்ப் பார்த்தாள்.

கதவுக்கு மேல் வெள்ளையாய், பெரிசாய் இல்லாமல், சின்னதாய் இல்லாமல், நடுத்தர சைஸில் ஒரு பல்லி இருப்பது தெரிந்தது. இந்தப் பக்கம் லைட்டுக்குப் பக்கத்தில் அதே மாதிரி இன்னொன்று...

'கக்...கக்...கக்...கக்...'

சப்தம் லைட்டிடமிருந்துதான் வருகிறதைப்போலத் தெரிந்தது.

லைட் பல்லி வாலை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பாம்பு போல வளைத்துவளைத்து ஆட்டி 'கக்...கக்...கக்...கக்...' என்று கத்துவது அதன் அசைகிற தாடை மூலம் அவளுக்குப் புரிந்தது.

பல்லி கத்துகிறதா? கொஞ்சம் நிம்மதியாயிற்று.

பட்டிணத்தில் பல்லி கத்திக் கேட்டதுண்டே...ஒரு தடவை கத்தும், அவ்வளவுதானே! இப்படி விடாமல் கத்திக் கேட்ட தில்லையே!

லைட் பல்லி இரண்டு எட்டு முன்னேறியது...மறுபடி வாலைப் பாம்பு போல நெளித்தது...கத்தியது...

பல்லிக்கு உடம்பு சரியில்லையோ? வயிற்றை வலிக்கிறதோ?

கதவுப் பல்லி நகரவேயில்லை. கொஞ்சம் கொஞ்சமாய் கதவுப் பல்லியை நோக்கி லைட் பல்லி இதே ராகம், வேகத்துடன் முன்னேறியது.

சண்டைக்குப் போகிறதா? பதுங்கிப்பதுங்கிப் பாய்கிறதா?

அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. 'கப்'பென்று பாய்ந்து சண்டை போடவேண்டியதுதானே? எதற்காக இந்தக் கத்தல், வாலாட்டல், பதுங்கல்?

நேரம் ஊர்ந்தது.

லைட் பல்லி கதவுப் பல்லியை நெருங்கநெருங்க அவளுக்கு சுவாரஸ்யம் அதிகமாகிப் போனது. ஆயிற்று, இரண்டும் நெருங்கி விட்டன.

கதவுப் பல்லி அசையவில்லையே?

லைட் பல்லி இன்னும் நெருங்கியது...மீண்டும் பாட்டு, வாலாட்டல்.

ரொம்பரொம்ப கிட்டே வந்துவிட்டது, தொடுகிற அளவுக்கு...

திடீரென்று பெரிசாய் லைட் பல்லி கத்தியது. ஒரே தாவல்! ஒன்றோடு ஒன்று பின்னிக் கொண்டன. ராகம் இல்லை, வாலாட்டல் இல்லை, ஒன்றுமில்லை. அமைதி.

ஆணும் பெண்ணுமா? இதையா இத்தனை நாழிகை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தோம்?

அவமான உணர்ச்சியுடன் அவள் தலையைத் திருப்பிக் கொண்டபோது வாசலில் ஜீப் சப்தம் கேட்டது.

– கணையாழி, 1977